

# மேலானவைகளையே நாடும் "பரலோக பொக்கிஷங்களின்" ஆசீர்வதிக்கப்பட்ட புத்தாண்டு நல்வாழ்த்துகள்

## "பழசிற்கு பதில் புதுசு!"

கிறிஸ்துவுக்கு 'புறம்பான' யாவுமே அழிந்திடும் நித்தியமற்றவைகள்! அவைகளையே 'பழையவைகள்' என 2கொரிந்தியர் 5:17, 4:18 கூறுகிறது. பாவ பழக்கங்கள், பிரிவினைகள், பகை விரோதங்கள் உங்களின் பழையவைகள்! உங்கள் துக்கம், சமாதானமின்மை, வியாதி போன்ற வருத்தங்களும், உங்களின் பழையவைகள்! அவிசுவாசம், மனசோர்வு, கவலைகளும் உங்களின் பழையவைகள்!

'யாதொருவன்' கிறிஸ்துவிடம் திரும்பி வந்து "என்னுடைய பழையவைகள் அனைத்தையும் மாற்றும்" என தாழ்த்தி ஜெபித்திடும் போது, "பழையவைகள் யாவையும் அகற்ற வல்ல கிறிஸ்துநாதர்" அவைகள் அனைத்தையும் ஒழித்து, சகலமும் புதிதாய் மாறும்படி செய்வார்! இப்போது, கிறிஸ்துவுக்குள் சகலமும் புதிதாகும் விந்தை சம்பவித்துவிடும்! இந்த விந்தை 2024 ஆண்டு முழுவதும் நம் யாவருக்கும் நிலைத்தோங்குவதாக! அல்லேலூயா!

-tr

பெட்டகம் 40 ஜனவரி பரல்கள் 1
2024



## ‘துன்பத்திலும்’ துதித்து விடுதலை காணும் தேவ ஜனம்!

எந்த வறண்ட நிலையிலும், தன் ஆர்ப்பரிப்பை, துதியை இழக்காத கிறிஸ்தவர்களை நாம் காண்பது, எத்தனை பரவசமாயுள்ளது! அப்படியே, நாம் அனைவரும் வாழ்ந்து குடும்பமாய், சபையாய் சுகித்திருக்கக்கடவோம்!

விசுவாச - துதியைப்போல், ஆண்டவருக்கு மிகவும் பிரியமானது வேறெதுவுமில்லை! “துதியின் கீதம்” நம்மிடத்தில் உண்டோ? என கண்டுபிடிப்பதற்கே ‘விசுவாச பரீட்சை’ நமக்கு ஏற்படுகிறது! அவர் செய்த பல நன்மையான ஈவுகளை ‘எண்ணிப் பார்த்து, எண்ணிப்பார்த்து’ துதிப்பவர்களே, தங்களுக்கு ஏற்படும் பாலைவன வறண்ட நிலையிலும் துதித்துப் பாடிட மறக்கமாட்டார்கள்!

ஓர் இனிய ஆங்கிலப்பாடலின் கருத்தை சற்று கவனித்து தியானியுங்கள்: “என் வறண்ட ஆத்துமாவே, உன் விடுதலைக்காக நீண்ட காலமாய் காத்திருக்கிறாய்! ஆத்துமாவே, இப்போது ஓர் நற்செய்தி கேட்பாயாக ‘நீ விரும்பிய விடுதலை’ இப்போதே உனக்காக காத்திருக்கிறது...... அதைப் பாடி மகிழ்ந்து சுதந்தரிப்பாயாக! ‘என் கட்டுகள் முறிக்கப்படட்டும்’ அப்போது நான் பாடுவேன்! என நீ காத்திருப்பது பிழையல்லவோ? பார் அங்கே, உன் ஆண்டவர் உன்னை ‘இப்போதே’ மகிழ்ச்சியின் விடுதலை கீதத்தால் உன் உள்ளத்தை நிறைத்துவிட, வாஞ்சையோடு காத்திருக்கிறார்! பாடு, உன் விசுவாச துதிபாடலை கெம்பீரித்துப்பாடு! இதோ, பொங்கி வரும் ஊற்றுத் தண்ணீரை உன் கண்ணார காண்பாய்!” ஆ, அல்லேலூயா!

*-Ed*


### 2024 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.170/- தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு ஜனவரி 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் ‘புதிது’ என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## செவ்வையான பாதையிலே என்னை நடத்தும்!

*உம் பாதையன்றி, செவ்வையான பாதை வேறில்லை*

**ம**கிழ்ச்சியான இந்த புதிய ஆண்டில் செவ்வையான பாதையிலே என்னை நடத்தும் என *தாவீது* அரசன் செய்த ஜெபம் நமது ஜெபமாய் மாறட்டும்! (சங்கீதம் 27:11). அதுஏனென்றால், "மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும்" எரேமியா 10:23-ம் வசனத்தில் கூறியுள்ளார்.

> **"கர்த்தரோடு நெருங்கிய உறவில் வாழ்ந்த மேடம் குயான் அம்மையார் கீழ்கண்டவாறு கூறினார். "இன்று அநேக ஜனங்கள் தங்களை முழுவதும் தேவன் நடத்துவதற்கு, அவருக்குத் தங்களை 'இராஜினாமா செய்யாமல்' (Resigning themselves), தேவாதி தேவனை தாங்கள் விரும்பியபடி நடத்தவே விரும்புகிறார்கள்! அவர் நடத்துகிற பாதையை பின்தொடராமல், தேவனுக்கே வழி காட்டுகிறார்கள்" என வருத்தத்தோடு அந்த பரிசுத்த மூதாட்டி கூறினார்கள்.**

மேலும், கர்த்தருடைய செவ்வையான பாதையில் நடப்பதற்கு 'எப்படியெல்லாம்' போராட்டம் வரக்கூடும் என்பதை 200-ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பரிசுத்தவான் *மேக்டோனால்டு* கீழ்க்கண்டவாறு விவரித்தார்:

**எ**ன் ஆண்டவா, நல்ல பசும்புல் வெளியிலே நான் நடக்க விரும்புகிறேன்! என அவரிடம் கூறினேன். அவரோ என்னைப் பார்த்து, *நீ பட்டணத்திற்குள் போ* என கட்டளை பிறப்பித்தார். அதற்கு நான் "என் ஆண்டவரே, புல்வெளியில் காணப்படும் மலர்கள் அங்கே இருக்காதே" என கூறினேன். அதற்கு என் கர்த்தர் ஆச்சரியமாய் கூறிய பதில் என்ன தெரியுமா? "**மகனே, மலர்கள் இல்லாவிட்டால் என்ன? உனக்கு ஓர் மகுடம் தருகிறேன்!**" என மகிழ்வுடன் தெரிவித்தார்.

1. நான் கூறினேன் "ஆண்டவரே இங்கே வானம் இருளாய் தோன்றுகிறது. நகரத்தின் சந்தடியும், அந்தகாரமுமே

அல்லாமல் வேறொன்றும் இல்லையே?" என கூறினேன். அதற்கு அவர் தழுதழுத்த குரலில் "மகனே, இதுமாத்திரமல்ல, நான் உன்னை அனுப்பும் பாதையில் அநேக சோதனைகளையும், பாவங்களையும் சந்திக்க நேரிடுமே" என கூறியபோது, அவரது மென்மையான உள்ளம் பரிதபித்ததைக் கண்டேன்!

2. கர்த்தாவே, "அப்படியிருந்தாலும், பட்டணத்தில் அசுத்த காற்று மண்டலமே இருக்கிறது, நகரத்தில் வெம்பனி சூழ்ந்திருக்குமே" என கூறினேன். அதற்கு அவர் "குணப்படாத ஆத்துமாக்கள் அந்த **காரிருளில் சிக்கி இருப்பதை** உன் கண் கொண்டு ஏறெடுத்துப்பார் மகனே" என மனபாரத்துடன் கூறினார்.

3. சற்று தயக்கத்துடன் "இருளில் இருக்கும் அந்த ஆத்துமாக்களை தேடி நான் செல்லுகையில், நான் வெளிச்சத்தை விட்டுப் போக வேண்டியதிருக்குமே, பின்னால் இருக்கும் என் நண்பர்கள் என்னை காணாமல் வருந்துவார்களே" என்றேன். அதற்கு என் ஆண்டவர் "என் பாதை விட்டு நீ விலகிப்போய், உன்னை காணாமல் **நான் வருந்துவதா** அல்லது உன்னை காணாதபடியால் **அவர்கள் வருந்துவதா?**" இதற்கு நீ எனக்கு பதில் சொல்! என சோகமுடன் கூறினார்.

4. திகைத்துப்போன நான், "ஆண்டவரே நல்ல தீர்மானம் எடுக்க எனக்கு சற்று அவகாச நேரம் தாரும்" என வேண்டினேன். அவர் உடனே "நான் நடத்தும் பாதையை நீ தீர்மானிப்பதற்கு ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? நானே முன் சென்று நடத்தும் என் அடிச்சுவடுகளை பின்பற்று, நீ பரலோகத்திற்கு வந்து சேரும்போது, 'கஷ்டம்' என சொல்வதற்கு அங்கு ஒன்றுகூட இருப்பதில்லையே" என புன்னகையுடன் கூறினார்.

5. **சற்றே கலங்கிபோன நான், என் மனம் விரும்பிய புல்வெளியை ஏறிட்டுப் பார்த்தேன்! பின்பு கர்த்தர் காட்டிய பட்டணத்தையும் நோக்கிப் பார்த்தேன். பின்னாலிருந்து கூறிய கர்த்தரின் குரல் "மகனே, உனக்கு எது வேண்டும்? நீ விரும்பிய மலருக்குப் பதிலாக மகுடத்தை தெரிந்து கொள்வதே எனது மனப்பூர்வமான விருப்பம்!" என உரைத்தார்.**

6. நான் உடனே அவர் கரத்திற்குள் முழு மனதுடன் என் கையை வைத்தேன். அவரோ என் உள்ளத்திற்குள் வந்து வாசம் செய்தார். அப்போது திவ்விய வெளிச்சம் நான் நடக்கும் பாதைக்கு வழி வகுத்தது! அட, இதற்கா இவ்வளவு பயந்தேன்? என மகிழ்ச்சியுடன் கூறி, அவருடைய பாதையில், அவரோடு கூட மகிழ்ச்சியுடன்

*நடந்தேன்! அன்று முதல் இன்று வரை மகிழ்வுடன் நடந்து வருகிறேன்! அல்லேலூயா.*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## தேவன் தந்த எல்லைக்குள் வாழ்வதே, நம் பாதுகாப்பு!

*பிறருடைய எல்லைக்குள் நுழைவது, மீறுதல் பாவம்*

அநீதியான மானிடர்கள் தங்களுக்குரிய எல்லையைக் குறித்து வைப்பதில் உறுதியாய் இருக்கிறார்கள். ஆகிலும், தாங்கள் குறித்து வைக்கும் எல்லை, அவர்களின் சுய நன்மைக்கேதுவாகவே உறுதிப்படுத்துகிறார்கள். ஆனால், தேவனுக்கு பயந்து வாழும் நீதியான ஜனங்களோ 'தேவ நீதிக்கு உட்பட்ட' தங்களின் குடியிருப்பின் எல்லையை அறிந்து மகிழ்வுடன் வாழ்கிறார்கள். நாம் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தங்களுக்குரிய சொந்த குடியிருப்பின் எல்லையில் தங்கியிருப்பதில் சகல தேவநீதியும் அடங்கியிருக்கிறது எனக்கூறலாம்.

> **"இன்று அநேகருடைய பரிசுத்தமாகுதலுக்கு ஏற்படும் தடங்கல்கள் அனைத்தும் 'நீதியான குடியிருப்பின் எல்லைக்குள், அவர்கள் வாழவில்லை' என்பதே காரணமாகும். தங்களின் எல்லையை மீறி, பிறருடைய எல்லைக்குள் அநீதியாய் நுழைந்திருக்கிறார்கள்! என்பதும் முக்கிய காரணமாய் இருக்கிறது.**

இன்றுள்ள உலகத்தின் எல்லா மக்களையும் எல்லா நாடுகளையும் கவனித்துப் பாருங்கள்! நாடுகளுக்கு நாடும், தங்களோடு உள்ள அயலகத்தாரிடமும் 'அன்று முதல் இன்று வரை' குடியிருப்பின் எல்லைத் தகராறு வளர்ந்து கொண்டே போவதை நாம் காணமுடிகிறது!

இந்த சத்தியத்தை வேதம் குறிப்பிடும்போது: "பூர்வ எல்லைக் குறியை மாற்றாதே, திக்கற்ற பிள்ளைகளுடைய (தகப்பனை இழந்த பிள்ளைகளுடைய) நிலங்களை அபகரித்து கொள்ளாதே" என நீதிமொழிகள் 23:10 எச்சரித்து கூறுகிறது. இந்த வசனத்தின் பகிரங்கமான உண்மை நம் யாவருக்குமே விளங்குகிறது, அதுஎன்னவெனில் என்னிடம் இல்லாத ஒன்றை நான் இச்சித்து விரும்புகிறேனா? எனக்கு இருப்பதை விட அதிகமான தேவையை உருவாக்கிக்கொண்டேனா? என்பதையே ஓர் கேள்வியாக நாம் வைத்திருக்க வேண்டும். உதாரணமாய், நம்மோடு சில ஜனங்கள் ஒரு அறையில் இருக்கும்போது, நாம் மாத்திரமே அந்த அறையில் அமர்ந்து கொள்ள விரிப்புகளைப் போடாமல், கூட இருக்கும் மற்றவர்களும் தாங்கள் அமர்வதற்கு விரிப்புகளை விரிக்க போதிய

*இடம் தரவேண்டுமென 'தேவநீதி' நமக்கு நேர்மையாய் போதிக்கும்! இந்த தெய்வ பிரமாணம் ஆவிக்குரியவர்களுக்கு மாத்திரமல்லாமல், சுபாவ சிந்தையில் வாழும் அனைவருக்குமே பொருந்தும்!*

> "**ஆவிக்குரிய ரீதியான நம்முடைய சுபாவங்களுக்கும் நம்முடைய ஊழியங்களுக்கும் குறித்து வைத்திருக்கும் எல்லைக்குள் மாத்திரமே நாம் தங்கியிருக்க வேண்டும்!**

*நமது எல்லையின் வரையறையை தாண்டி நாம் சென்றிட முற்பட்டால் 'நமக்கு மிஞ்சின விஷயங்களை' நாம் பேசத் துவங்கிவிடுவோம். தேவன் நமக்கு வெளிப்படுத்தின வெளிச்சத்தை மீறி நாம் சென்றுவிட்டபடியால் "நீங்கள் பேசிய அனைத்துமே, உங்கள் சொந்த அபிப்பிராயங்களாகவும் உங்களின் சொந்த வெளிப்பாடாகவும் மாறிவிடும் என்பது உறுதி. உங்களுக்கு தேவன் வெளிப்படுத்தின விஷயத்தில் மாத்திரமே நீங்கள் ஏன் தங்கியிருக்கக்கூடாது. நீங்கள் அப்படிச் செய்யாதபடியால் 'அநீதி கொண்ட சகோதரனாய் மாறிவிட்டீர்கள்! ஏனெனில் உங்களுக்கு தடை செய்யப்பட்ட எல்லைக்குள் இப்போது நீங்கள் நுழைந்துவிட்டீர்கள். இதனிமித்தம் மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ வேண்டும் என்ற தெய்வ பிரமாணத்திற்கு உங்கள் மூலமாய் சேதம் ஏற்பட்டுவிட்டது!*

*இதை வேத வசனம் இன்னும் தெளிவாய் சுட்டிக்காட்டி "நாங்கள் அளவுக்கு மிஞ்சி மேன்மைபாராட்டாமல், உங்களிடம் வரைக்கும் மட்டுமே" வந்தோம்! ஏனெனில் தேவன் எங்களுக்கு அளந்து பகிர்ந்த அளவு பிரமாணத்தின்படியே 'கர்த்தரை மேன்மை பாராட்டினோம்' என 2கொரிந்தியர் 10:13 புத்தி சொல்கிறது. அதை பவுல் அப்போஸ்தலன் இன்னமும் விளக்கிக்கூறும்போது:*

> "**"....நாங்கள் அளவுக்கு மிஞ்சி போகிறதில்லை! எனவும்.... எங்கள் அளவைக்கடந்து மற்றவர்களுடைய பிரயாசத்தில் எங்களை உட்படுத்தி, அதில் எங்களை மேன்மை பாராட்ட துணியமாட்டோம்" எனக் கண்டித்து புத்தி கூறினார் (2கொரிந்தியர்10:13-15).**

*தேவனுடைய இருதயத்திற்கு தாவீது மிகவும் பிரியமாயிருந்ததற்கு மற்றொரு காரணம் என்னவென்றால் "கர்த்தாவே என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமை கொண்டதுமல்ல! பெரிய காரியங்களிலும் எனக்கு மிஞ்சின கருமங்களிலும்* **நான் தலையிடுவதில்லை!**" *என மிகுந்த பொறுப்போடு 'தேவன் தனக்கென்று வைத்த எல்லையை' தெய்வ பயத்தோடு கைக்கொண்டு கூறினார்!*

*(சங்.131:1).* ஆகவே, "தேவன் தந்த எல்லைக்குள் தங்கியிருப்பது" என்ற பிரமாணத்தில் அனேக தேவ நீதி அடங்கியுள்ளது. தேவ பயத்தோடு இந்த பிரமாணத்தின்படி வாழ்பவர்கள் திரளான அநீதியிலிருந்து விலகியிருப்பார்கள்! பிறருடைய எல்லைக்குள் பிரவேசிக்கும் மீறுதல்களிலிருந்தும் கர்த்தரால் காக்கப்படுவார்கள்! இந்த ஆண்டில், இந்த தேவபிரமாணத்தை கைக்கொண்டு வாழ்ந்து பாருங்கள்..... உங்கள் ஜீவியத்தில் மண்டியிருக்கும் 'அநீதியான துன்பங்கள்' உங்களை விட்டு நிச்சயமாய் அகன்று போவதை காண்பீர்கள்! நல்ல தீர்மானத்தோடு, 'தலையீடு' செய்த பகுதியிலிருந்து உங்களை விலக்கி வாழுங்கள்! கர்த்தரின் சமூகம் உங்களை நிச்சயமாய் அவரது ஆசீர்வாதத்திற்குள் நிறைவாய் நடத்தும்!

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## 'உறுதியான தீர்மானம்' ஜீவிய படகை திசை மாற்றாது!

*நம் தீர்மானங்களை கர்த்தர் கனம் செய்கிறார்*

**தீ**ர்மானம் ஏதும் இல்லாமல், பயணமும் ஏதுமில்லை! உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுக்கும் தீர்மானமே, சமுத்திரமாகிய இந்த உலகில் உங்கள் ஜீவிய படகு சரியான திசை நோக்கிச் செல்ல வழிவகுக்கும்.

அன்றொருநாள் தானியேல், தான் இருந்த ராஜஅரண்மனையில் ஓர் தீர்மானம் எடுத்தான்! அந்த தீர்மானம் "ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னை தீட்டுப் படுத்தலாகாது என்று, தன் **இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு,** தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்" *(தானியேல் 1 : 8).* இது ராஜாவுக்கு முன்பாக தானியேல் எடுத்துக்கொண்ட ஒரு மிகப்பெரிய தீர்மானம் ஆகும். இதுபோன்ற அசைக்க முடியாத உறுதியுள்ள தீர்மானத்தை "முதுகெலும்பில்லாத இன்றைய கிறிஸ்தவத்தில்" நாம் அதிகமாய் கேட்க முடியவில்லை. இருப்பினும் கர்த்தரை சேவித்து வாழும் வாழ்க்கையில், எண்ணற்ற தீர்மானங்கள் எடுத்து வாழ்ந்தவர்களின் குறிப்புகளை வேதாகமம் நமக்கு வழங்கியிருக்கிறது.

அன்றொருநாள், யாக்கோபு தேவனுக்கு முன்பாக "ஓர் உறுதியான பொருத்தனை அல்லது தீர்மானம் செய்தான்" என வாசிக்கிறோம். அந்த தீர்மானம், யாக்கோபு தேவனோடு உறவாடி வாழ்ந்த ஓர் ஆச்சரியமான வாழ்க்கைக்கு நல்ல ஆரம்பமாய் அமைந்தது. உண்மைதான், தானியேல் தன் இருதயத்தில் தீர்மானித்தைப் போல,

யாக்கோப்பின் தீர்மானத்தையும் தேவன் கனம் பண்ணினார்!

> "இயேசுவும் முழு தீர்மானத்துடன், தனக்கு பிதா அளித்த பாத்திரமாகிய சிலுவையை தழுவிக் கொள்ள தீவிரித்து முன் சென்றார்! அந்த தீர்மானத்தின்படியே, சிலுவையில் மரித்து மூன்றாம் நாளில் ஜெயமாய் உயிர்த்தெழச் செய்து, பிதா அவரை கனம் பண்ணினார்!

அன்றொருநாள் "சிலுவையில் அறையப்பட்ட இயேசுவையே அல்லாமல், வேறு எதையும் நீங்கள் அறியாதிருக்க நான் தீர்மானம் செய்தேன்" என பவுல் உறுதி பூண்டார். அதுவே அவரது வாழ்வும் முடிவுமாயிருந்தது. இவ்வாறு வேதாகமத்தில் "ஆவிக்குரிய உன்னதத்தை" அடைந்த புருஷர்களையும் ஸ்திரீகளையும் குறித்து அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏராளமாய் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க, தீர்மானம் ஏதும் இல்லாது பயணம் செய்பவர்கள், திசை மாறி, பாவம் செய்பவர்களாயும், தங்கள் சுயசித்தத்தின் படுகுழிக்குள் விழுபவர்களாயும் மாறுவார்கள். இவர்கள் சென்றடைய வேண்டிய இலக்கு "பேரிழப்பாகவே " முடிகிறது. கிறிஸ்துவின் உத்தம அடியார்களோ, தேவன் தங்களுக்கென்று வைத்த இலக்கை அடைவதற்கே தீராத வேட்கை கொண்டு முன்னேறுகிறார்கள்!

> "இவர்கள் கண்டடைந்த இலக்கு, தேவனுடைய சித்தத்தை செய்திட வேண்டுமென்ற அவர்களது உறுதியான தீர்மானத்தை சார்ந்ததாகவே எப்போதும் இருக்கிறது!

இன்று, நல்லதோர் ஆரம்பமாய் தேவசித்தமே செய்து முடித்திட, நம் வாழ்க்கைப் படகின் பயணத்தை திடமான தீர்மானத்துடன் திசை திருப்புவோமாக! இவ்வாறு நீங்கள் செய்துவிட்டால், சரியான திசையில் உங்கள் வாழ்க்கைப் படகு சென்று கொண்டிருக்கும்! உங்கள் படகில் எத்தனை புயல் வீசும்.... எத்தனை கடல்கொந்தளிக்கும்.... என்பதெல்லாம் உங்களுக்கு ஒரு பொருட்டாகவே இருக்காது!

*- A.W.டோசர்*

---

## 'என் சரீர சுகத்திற்கும்' கர்த்தர் சமீபமாயிருந்தார்!

*ஆத்தும சுகம் நாடும் கர்த்தர், வியாதியிலும் சுகம் தருகிறார்*

**எ**ன் ஆவிக்குரிய நிலையில் கர்த்தர் என்னை உயர்த்தி வைத்தபடியால், *தந்தை லா-கோம்பே* அவர்களும் அந்த உச்சித நிலைக்கு வந்துவிட வேண்டும் என்ற பேராவல் எனக்கு இருந்தது.

இத்தனை காலம் என்னை உயர்த்துவதற்கு பாடுபட்டு ஊழியம் செய்த லா-கோம்பே அவர்கள், இப்போது சுயத்தை அழிக்கும் பாதையில் தடுமாறுவதைக் கண்டு அவருக்கு உதவும்படி கர்த்தர் எனக்குத் தந்த உத்தரவு மிகப்பெரும் பணியாக நான் ஏற்றுக்கொண்டேன்:

> *அவர் தன் சுயத்திற்கு விட்டுக் கொடுத்தது போன்ற நிலையிலும், மெய்யான ஜீவ ஒளியை விட்டு விலகியதையும் கண்டு வருந்தினேன். 'சுயத்திற்கு மரிக்க வேண்டும்' என்ற மகிமையின் சுவிசேஷத்தை, அவர் நன்றாய் அறிந்திருந்தும், தடுமாறிய இந்த இக்கட்டான நேரத்தில், நான் வாழ்ந்த அடிச்சுவடை அவருக்கு மாதிரியாக காண்பிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் நான் இருந்ததைக் கண்டு தயக்கமுற்றேன்!*

இந்த அனுபவம் எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. நான் அடைந்த ஆச்சரியத்தையும், தயக்கத்தையும் 'ஒரு முறையீடாய்' கர்த்தருக்கு முன்பாக வைத்தேன்! கர்த்தரோ, மிக தயவாய் என்னை திடப்படுத்தி, அவரையே முற்றிலும் சார்ந்து கொள்ளும்படியாக கட்டளையிட்டார். அதற்குப் பிறகுதான் என் இருதயம் **'பிறந்த குழந்தையைப்போல்'** அமைதி அடைந்தது!

இந்நாட்களில், என் சகோதரி என் வீட்டு வேலைக்கு உதவியாக ஒரு அம்மையாரை அழைத்து வந்தார்கள், அந்த அம்மையாரை கர்த்தருடைய சித்தத்திற்குள் நடத்தும்படியாக என்னிடம் தேவனே அவர்களை ஒப்படைத்ததாகவே உணர்ந்தேன்! சிலரை ஆவிக்குரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு 'நான் சிலுவையில் அறையப்பட வேண்டும்' என்ற நியதியை நான் கற்று வந்திருக்கிறேன். ஒரு ஆத்துமாவை கர்த்தர் எனக்கு தந்தருளும்போது 'அவர்கள் மூலமாய்' நானும் பாடுபட அருளப்படுவது நம் எல்லோருக்குமே உள்ள தேவ நீதியாகும்!

> **"எந்த பாடுகளும் நாம் தேவனை இன்னும் கிட்டிச் சேர்வதற்குரிய நோக்கத்திற்காகவே வருகிறது! மேலும் ஒரு உத்தம கிறிஸ்தவனுக்கு நிகழ்ந்திடும் 'சிலுவையின் துன்பப்பாதையில்' நம்மை தனியே விடாமல் கர்த்தர் கூடவே நிற்பதையும், எல்லா பரிசுத்தவான்களும் அனுபவமாய் அறிந்திருக்கிறார்கள்!**

இப்போது என் பொறுப்பில் தரப்பட்ட இந்த சகோதரி தேவனிடத்தில் விசேஷித்த கிருபைகளை பெற்று வாழ்ந்தவர்களாய் இருந்தார்கள். பிரான்ஸ் தேசத்திலிருந்த பொதுமக்களில் பெரும்பாலோர் அவர்களை நன்கு அறிந்திருந்தார்கள். கிறிஸ்தவ

*மார்க்க உலகில் 'புனிதர்' எனவும் போற்றப்பட்டிருந்தார்கள். கிறிஸ்தவ சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடைந்திருந்த இந்த சகோதரியை கர்த்தர் என்னிடம் ஒப்படைத்து 1) உலகம் புகழும் புனிதர் பட்டத்தில் ஒரு பிரயோஜனமும் இல்லை எனவும் 2) "மனுஷருக்கு முன்பாக கருதப்படும் மேன்மைகள் யாவும் கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானவைகள்" எனவும் தெளிவாக வேறுப்படுத்தி காண்பிக்க ஆண்டவர் கட்டளையிட்டார்!*

*"இதுபோன்ற மேன்மைகளை" ஒரு குறிப்பிட்ட காலத்தில் இழக்க நேரிட்டாலும், அதை மகிழ்ச்சியுடன் இழக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும் எனவும், அந்த சகோதரிக்கு போதித்து நடத்தும்படி கூறினார். நான் சார்ந்து கொள்ளும்படி தந்தை லா-கோம்பேயை எனக்குத் தந்ததைப்போலவே, என்னைச் சார்ந்து கொள்ளவும் அந்த வயது சென்ற சகோதரியை கர்த்தர் நடத்தியிருந்தார்!*

***அ**ந்த சகோதரி என்னிடம் வந்த காலத்தில் மிகவும் வியாதிப்பட்டு இருந்தார்கள். எல்லாவித மருத்துவ உதவிகளும் நான் அவர்களுக்கு ஏற்பாடு செய்து தந்தபோதிலும், எந்த சுகமும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் **ஜெபம் ஒன்றே உயிரோட்டமாக நான் கண்டேன்.** ஆகவே, அந்த சகோதரியின் நோய்கள் அந்த அம்மையாரின் சரீரத்திலிருந்து விலகும்படி கட்டளையிட்டு ஜெபிக்கும்படி உந்தப்பட்டேன்! 'கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதைப் போலவே, 'அவருடைய வார்த்தையின்படி கட்டளையிடுவதையும்' என்னுடைய அனுபவமாய் கற்றுக்கொண்டேன்.*

*இவ்வாறு, நான் இயேசுவின் நாமத்தில் கட்டளையிட்டு ஜெபித்த போதிலும், அந்த சகோதரி சில நாட்கள் தொடர்ந்து வியாதியால் கஷ்டப்பட்டார்கள். அன்று இரவு உணவிற்குப் பிறகு, அந்த அம்மையாரைப் பார்த்து 'எழுந்திருங்கள்! இனிமுதல் உங்களுக்கு வியாதியில்லை!' என கட்டளையிடும்படி ஆவியானவரால் பலத்த விதத்தில் உந்தப்பட்டேன். அவ்வாறு கட்டளையிட்ட அடுத்த கணமே, அந்த சகோதரி எழுந்து நின்று பூரண சுகமடைந்தார்கள். இதைக்கண்ட கன்னியாஸ்திரீகள் யாவரும் மிகுந்த ஆச்சரியமடைந்தார்கள். இது எப்படி ஆனது? என வியந்த கன்னியாஸ்திரீகள், அவர்கள் நன்றாய் நடப்பதைப் பார்த்து பிரமித்தார்கள். அன்று காலையில் 'மரண விழிம்பில்' இருந்ததைப் போன்ற நிலையிலிருந்து, கற்பனைக் கெட்டாத தெய்வீக சுகத்தை அங்கிருந்த யாவரும் கண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்!*

*- மேடம் குயான்*

## ‘கிருபை இழந்து’ சத்தியம் பேசுவது கிறிஸ்தவ போதனை அல்ல!

*உப்பின் சாரத்தைப் போல் ‘கிருபை’ காக்கப்படுவதாக*

*சத்தியத்தைப் பிரசங்கிக்க அநேகரால் கூடும்! ஆனால், அதை கிருபையுடன் பேசுவதோ கடினம். தன் ஜீவியத்தில் பாவத்தை வைத்துக்கொண்டே ஒருவர் மகா வைராக்கியமாகப் பிரசங்கித்தார்! அதைப்பற்றி அவரிடம் தனிமையாகக் கேட்டபோது,* **நான் எப்படியிருந்தால்தான் என்ன? நான் பிரசங்கிப்பது வேத சத்தியமல்லவா! என்றார்.** *இப்படி பிரசங்க ஊழியம் லேசானது என இன்று அநேகர் நினைப்பதற்குக் காரணம் இதுதான்!*

> **“ உத்தம பிரசங்கியாயிருப்பது எவ்வளவோ துன்பத்தைக் கடந்து நிரூபிக்க வேண்டிய பங்கு என அநேகர் உணருகிறதில்லை.**

*சுத்த இருதயத்தோடும், அன்பும் கிருபையும் நிறைந்த இருதயத்திலிருந்து பொங்கிவரும் போதனை எப்படிப்பட்ட மேன்மையென்று தெரியுமா! வேதத்தில் ஏதோ ஒன்றைப் படித்துக்கொண்டு, அதைப் பேசிவிடுவது பிரசங்கமாகுமா? மனுஷருக்கு வேண்டுமானால் அது பிரசங்கம்போல் தோன்றலாம். இருதயங்களை அறிந்திருக்கிற ஆண்டவர் என்ன சொல்லுவார்?*

*இயேசு எழுந்து பேசிய கிருபை நிறைந்த வசனமோ, சத்துருக்களையும் நடுங்க வைத்து உணர்த்தியது! அவரது கிருபை நிறைந்த வசனமே பாவிகளைக் கைதூக்கி இரட்சித்தது!*

> **“ அறிவீனரும், பாவிகளும், ஆத்துமா தொய்ந்தவர்களுமான புருஷரும் ஸ்திரீகளும், அவருடைய கிருபை நிறைந்த வசனத்தால் ஆறுதலையும் இளைப்பாறுதலையும் கண்டார்கள்.**

*அவர் சிலரை பார்த்து “உங்களுக்கு ஐயோ! உங்களுக்கு ஐயோ” என்று பிரசங்கத்தில் சொல்லியிருந்தாலும், அது அவரது மனதுயரமேயன்றி, சாபமல்ல! அவர் அழிக்க வராமல் இரட்சிக்கவே வந்தார்!!*

*கிறிஸ்து, கிருபை நிறைந்த போதகர்! “அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்”. அவர் அதிகாரத்தோடு பேசினது மாத்திரமல்ல,* **மனுஷருள்ளத்தை அறிந்து அவர்கள் இருதயத்துக்கே பேசினார்!** *அவர் பேசின வார்த்தைகள் கிருபை பொருந்தியிருந்தன. அவர் பேசக்கேட்ட ஜனங்களில் சிலர் அவரை ‘எலியா’ என்றார்கள்.*

மற்றவர்கள் 'எரேமியா' என்றார்கள். அக்கினியான எலியாவும், **ஜனங்களுக்காய் அழுத எரேமியாவும்** சேர்ந்து அவர் உபதேசத்தில் விளங்கினது மெய்தான்! **வேதபாரகருடைய போதனையில் அன்போ, கிருபையோ, இரக்கமோ இருந்ததில்லை!** அவர்கள் ஐசுவரியவான்களைப் புகழ்ந்தும், ஞானிகளைப் போற்றியும், ஏழைப்பாவிகளைச் சபித்தும் போதித்தார்கள்.

ஆண்டவருடைய உபதேசத்தில் கண்டிப்பில்லை என்று எண்ணிவிடக்கூடாது. அவரைப்போல் மகா தைரியமாய், கண்டிப்பாய் போதித்தவர்கள் யார்? வேதபாரகர் பரிசேயருடைய மாயங்களை வெளியரங்கமாகவே கடிந்து கொண்டார். அவர் காலத்து ஆலய அதிகாரிகள், ஜனத்தின் மூப்பர்கள் மகா நீச நிலைமையிலிருந்தார்கள். தங்கள் உள்ளான கேட்டைப் புறம்பான உத்தியோகங்களால் மறைத்து, ஜனங்கள் பார்வையில் மேன்மைபெற்றிருந்தார்கள். அவர்களுடைய மாயத்தையும் கல்லறைக் குழிபோன்ற அவர்கள் இருதயத்தின் கேடுபாடுகளையும் இயேசு பகிரங்கமாக எடுத்துக் கூறினார். அவர்களுடைய அக்கிரமங்களால் தேவ மார்க்கம் கெட்டு, ஆலயம் அசுசிப்பட்டு, கர்த்தருடைய ஜனங்கள் ஏமாற்றப்பட்டுத் தவித்தது அவரால் தாங்கக்கூடவில்லை! "மனுஷருக்கு முன்பாக மேன்மையாக எண்ணப்பட்டது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" என கூறினார். ஆகையால் அதிக வைராக்கியத்துடன் அவர்களைக் கடிந்துகொண்டார்.

> **"எவ்வளவு கண்டிப்பாய் பேசினபோதிலும், அவர் இருதயத்தில் அன்பும் கிருபையும் நிறைந்திருந்தன. அவருடைய வைராக்கியமான வார்த்தைகளில் கிருபை கலந்திருந்தது. இரட்சகர் சத்தியத்தோடுமாத்திரம் வந்தவரல்ல. அவர் "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய்" வந்தார்.**

அன்பின் அவதாரமும் கிருபைப் பெருக்கமுமாய் வந்தவர், வேறுவிதமாய்ப் பேசுவதெப்படி? பாரபட்சமின்றி அனைவருக்கும் கிருபையை பகிர்ந்தார்!

கிருபையற்ற பிரசங்கம் உப்பில்லாப் போஜனத்துக்குச் சமானம். நாம் சத்தியத்தை வைராக்கியமாகப் பேசுவதால் "வெட்டொன்று துண்டு இரண்டு" என்பதுபோல் ஆழமாய் விழலாம். அதற்குமேல் என்ன நடக்கும்? யோவான் ஸ்நானகன் சத்தியத்தினாலே வந்தவர். அநேக இருதயங்கள் உடைபட்டன! அதற்குமேல் நடந்ததென்ன? அவர்களுக்குப் பாவமன்னிப்பையும் ஆறுதலையும் சமாதானத்தையும்

கொடுக்க அவரால் கூடாமல், தன்னிலும் பெரியவரான கிறிஸ்துவிடம் அவர்களை அனுப்பினார்! ஆண்டவருடைய சீஷரில் ஒருவராகிய அப்போஸ்தலன் யோவான், இவர்கள் இருபேருக்குமுள்ள வித்தியாசத்தை அறிந்து கிறிஸ்துவோ கிருபையினாலும் சத்தியத்தினாலும் வந்தார் என்று எழுதினார் (யோவான் 1:17). **வெறும் சத்தியம் மனதைக் கடினப்படுத்தும், கிருபையுள்ள வசனங்களே உள்ளத்தை உருக்கி ஆற்றும்.** ஆகையால் "அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் (பிரசங்க வார்த்தைகள்) எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" என்று பவுல் அப்போஸ்தலன் தன் அனுபவத்திலிருந்து சொன்னார் (கொலோ.4:6). கிருபை நாதருக்கே மகிமையுண்டாவதாக! ஆமென்.

- பரமானந்தம் ஐயர்

---

## ஸ்தல சபையில் இணைவது எப்படி?

*பெயரைப் பதிவதல்ல, அது தேவனுடைய செயல்*

**பு**திய ஏற்பாட்டில், ஒரு இடத்தில் கூட 'நான் சபையில் இணைந்து கொண்டேன்' என்ற வாக்கியம் இடம் பெறவில்லை! அதுஏனென்றால், ஒருவரும் சபையில் தாங்களாகவே இணைந்து கொள்ள முடியாது என்ற உண்மையேயாகும். 'நான் சபையில் இணைந்து கொண்டேன்' என்று ஒருவர் கூறினால், நீங்கள் இன்னமும் சபைக்கு வெளியில்தான் இருக்கிறீர்கள். உங்கள் காது, உங்கள் சரீரத்தில் இணைந்து கொள்ளத் தீர்மானித்ததாக கூற முடியுமா? ஏனென்றால் என் காது என் சரீரத்தோடு இருக்குமென்றால் 'இயற்கையாகவே' சரீரத்தோடு இணைந்துதான் இருக்கிறது! அதுபோலவே, நாமும் சபையில் நாமாக இணைந்து கொள்ள இயலாது!

தேவனுடைய இரக்கத்தினால், ஒரு மனிதன் தன் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டு, விலையேறப்பெற்ற இயேசுவின் இரத்தத்தினால் மன்னிக்கப்பட்டு மீட்கப்பட்டிருந்தால், புது ஜீவியத்தை பெற்ற அவன் மறுஜென்மம் அடைந்தது மாத்திரமல்லாமல், தேவனுடைய வல்லமையால் சபைக்குள் சேர்க்கப்படுகிறான்! ஆம், தேவனே அந்த நபரை தம்முடைய ஸ்தல சபையில் சேர்த்துக்கொண்டார் (அப்.2:47). தன் சொந்த வீட்டில் ஒருவன் இருப்பதைப்போல, தன் ஸ்தல சபையில் இருக்கிறான். இது, 'நான் சபையில் சேர்ந்து கொண்டேன்' எனக்கூறுவதற்கு முற்றிலும் முரணானதாகும்! அது, நிலைத்திருக்கும் நிஜமானது அல்ல!

“ **ஒருவன் பரிசுத்த ஆவியினால் மறுபடியும் பிறந்திருந்தால், தேவனுக்கும் அவரது வீடாகிய சபைக்கும் சொந்தமாய் மாறிவிடுகிறான். ஆகவே ஒருவன் நான் சபையில் இணைகிறேன் எனக்கூறுவது தவறு!**

*ஒருவன் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்வதைப்போல், நானும் ஒரு சபையில் சேர வேண்டும் எனக்கூறுவதும் தவறு! அவ்வாறு இணைவதாகக்கூறிக்கொண்டு, சபைக்குள் நுழைந்திட ஒருவராலும் கூடாது. உண்மைதான், நான் இணைகிறேன் எனக்கூறுவதைப்போல் சபையில்லாதிருப்பது* **‘சபைக்குரிய மிகப்பெரிய விசேஷம்’** *என்றே கூற வேண்டும். ஒருவன் தேவனால் பிறந்திருக்க வேண்டும் என்ற உறுதியான நிலையே, அவன் சபையில் இருக்கிறான் என்பதற்கு ஆதாரமாகும். ஒருவன் தேவனால் பிறந்திருக்கவில்லையென்றால் “நான் சபையில் இருக்கிறேன்” எனக்கூறிக்கொள்வது, தன்னையே ஏமாற்றிக்கொள்வதாகும்! இன்னும் அதிகமாய், சபையின் பதிவேட்டில் உங்கள் பெயரைப் பதிந்து கொள்வதாலோ அல்லது ஒரு தீர்மான அட்டையை எழுதிக்கொடுத்ததாலோ, ஒருவன் சபையில் சேர்ந்து கொள்ள இயலாது! இதுதான் சத்தியம்.*

“ **தேவனால் பிறந்து, நீங்கள் முன்கூட்டியே சபைக்குரியவர் என இருந்தாலும், சபையில் இருக்கும் சகோதர சகோதரிகள், நீங்கள் ஒரு உத்தம கிறிஸ்தவ விசுவாசி என்பதை அறிந்திருக்கச் செய்ய வேண்டும்!**

*தேவனால் பிறந்த மறுஜென்மம் மற்றும் உங்கள் விசுவாசம் ‘இருதயத்திற்குரியதாய் இருக்கிறபடியால்’ அதை மற்றவர்கள் அறிந்து கொள்ள இயலாது. ஆகவே நீங்களும் கிறிஸ்துவின் சரீரத்தை சேர்ந்தவர் என்ற உண்மையை, சபையிலிருக்கும் சகோதர சகோதரிகளிடம் உங்களின் வாஞ்சையான ஐக்கியத்தின் மூலமாயும், அறிக்கையின் மூலமாயும் வெளிப்படுத்த வேண்டும். பவுல் எருசலேமின் சபைக்கு வந்தபோது, அங்கிருந்த எருசலேம் சபையாரிடம் ஐக்கியத்தின் அடையாளமாக தன் வலது கையை கொடுத்து ஐக்கியப்பட்டார்! (கலா.2:9). ஆகவே நாம் ஒழுங்கும் கிரமமுமாய் சபைக்குச் சென்று, நாங்களும் கிறிஸ்தவர்கள் என சாட்சி பகர்ந்து* **உங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி** *நடந்து கொள்ள வேண்டும். நம்முடைய இரத்த சம்பந்தமான சகோதர சகோதரிகளாய் இருப்பவர்களை நாம் அறிந்திருக்கிறோமே! இப்போது, ஆவிக்குரிய பிரகாரமாய், ஸ்தல சபையிலுள்ள சகோதர சகோதரிகளிடம் உங்களையும் அவர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ள நாட வேண்டும்! இவ்வாறு கிறிஸ்துவின் சரீரமான சபையில் நீங்கள் ஐக்கியமாய் வாழும்போது, தேவனுக்கு*

*வல்லமையாய் ஊழியம் செய்திட முடியும்! இவ்வித ஐக்கியம், உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் என்ற ஆசீர்வாதத்தை நீங்கள் நிச்சயமாய் காண்பீர்கள்!*

*- வாட்ச்மென் நீ*

---

## 'பரிசுத்தாவியை' சார்ந்து வாழ்ந்த பில்லிகிரஹாம்!

*பரிசுத்தாவியின்றி, தேவ தாசர்கள் ஊழியம் செய்ய துணிந்தது இல்லை*

*பில்லிகிரஹாமின் பிரசங்கங்கள் எளிமையாயிருந்தாலும், வல்லமையும் அதிகாரமும் நிறைந்ததாயிருக்கும்! தன்னைப் பற்றி பவுல் கூறிய அறிக்கையே பில்லிகிரஹாமிற்குப் பொருந்தும்: "என் பேச்சும் என் பிரசங்கமும் மனித ஞானத்திற்குரிய நயவசனிப்புள்ளதாயிராமல், ஆவியினாலும் வல்லமையினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தன" (1கொரி.2:5). பில்லி கிரஹாம் பேசும்போது, கூட்டத்தினர் மீது ஆவியானவரின் அசைவாடுதல் தெளிவாய் காணும்படி இருக்கும்! அதை யாராலும் மறுக்க முடியாது! "பரிசுத்த ஆவி அபிஷேகத்தின்" அவசியத்தை இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அவர் எப்பொழுதும் வலியுறுத்தி பேசுவார்! (எபே.5:18). ஆம்ஸ்டர்டாம் 1983-ம் மாநாட்டில், ஒரு மாலைக் கூட்டத்தின் செய்தி, பரிசுத்த ஆவியானவரைப் பற்றியதாயிருந்தது. அந்த செய்தியை* Campus Crusade for Christ-*ன் நிறுவனராகிய* Dr.*பில் பிரைட் (1921-2003) அவர்கள் பிரசங்கித்தார். அவரது பேச்சில் பிரசங்க விளக்கங்கள் இருந்தன! ஆனால் செயலாற்றுதலை நடைமுறைப்படுத்தி அவர் பிரசங்கிக்கவில்லை. பில் பிரைட் பிரசங்கித்து உட்கார்ந்தவுடன், பிரசங்க பீடத்திற்குப் பில்லி கிரஹாம் சென்று "நொறுங்கிய உள்ளத்துடன்" அங்கு உட்கார்ந்திருந்த 5000 ஊழியக்காரர்களுக்கு:*

> "நண்பர்களே, உங்கள் விடுதி அறைகளுக்குச் சென்றதும் முழங்காலிடுங்கள்! ஒரு புதிய அபிஷேகத்தைத் தரும்படி தேவனிடம் உறுதியாய் கேளுங்கள்! உங்களுக்கு அபிஷேகம் கிடைத்துவிட்டது என்ற நிச்சயம் வரும்வரை முழங்காலிலிருந்து எழும்பாதீர்கள்!" என சவாலிட்டு கூறினார்!

*பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தன்மீது இராமல் தன்னால் பிரசங்கிக்க முடியாதென்று பலமுறை அவர் அறிக்கையிட்டிருக்கிறார்! நடுக்கத்தின் காரணமாக, வியர்வையால் நனைந்திருந்த தனது உள்ளங்கைகளைக் கூட்டத்தினரிடம் காட்டி, "நான் தேவனுக்கு முன்பாக பெலவீனமாய் இருக்கிறேன் என்பதை நீங்களே பாருங்கள்!*

*ஆகவேதான், நான் பரிசுத்தாவியின் வல்லமையை பெறுவதற்கு, ஒவ்வொரு நாளும் கெஞ்சி ஜெபித்து, பெற்று வருகிறேன்!" என பதைபதைத்து பேசினார்! இதைக் கேட்டபோது, ஊழியக்காரக் கூட்டத்திலிருந்த அனைவருமே, உள்ளம் உடைந்து, எழுந்து நின்று.... கரவொலி எழுப்பினார்கள்! பிரசங்கியாராயிருப்பதற்குப் போதுமான தாலந்தோ, திறமையோ, சொல் வளமோ தங்களிடம் இல்லை என எண்ணியிருந்த ஊழியர்கள் பலர் அடைந்த ஊக்கத்திற்கு அளவேயில்லை எனலாம்! இன்றும், இயேசு சவாரி செய்து வருவது, கம்பீரமான குதிரைகள் மீதல்ல! கனிவான கழுதைகள் மீதே! என நிரூபித்து வாழ்ந்து, ஊழியம் செய்தார் தாழ்மை ஊழியர் பில்லிகிரஹாம்!*

*- பில்லி கிரஹாம் USA*

---

## 'முற்றிலும் சரணடையும்' ஜீவியமே உத்தம கிறிஸ்தவம்!

*கிறிஸ்துவுக்கு ஒப்புவித்து வாழ்பவனே மாற்றம் பெறுவான்*

**சு***விசேஷ மிஷன் ஸ்தாபகராய் தேவ மனிதன் விக்கிள்ஸ்வொர்த் இருந்த காலத்தில், பிராட் போர்டு நகரத்திலிருந்த பெர்ரி என்ற ஒரு மனிதன் அரசாங்க உத்தியோகத்தில் குற்றவாளிகளை தூக்கிலிடும் பணியைச் செய்து வந்தான். பெர்ரியைப்போல் ஒரு துஷ்டனை காண இயலாது. அவர் தனது பணியின் கடைசி எட்டு வருடங்கள்* **ஏராளமான குற்றவாளிகளை தூக்கிலிட்டு** *பணியிலிருந்து ஓய்ந்தார். பிராட்போர்டில் உள்ள துராகிதமான மனிதன் கூட பெர்ரியிடம் பேச தயங்குவார்கள். அவன் அவ்வளவு கொடூரமும் கெட்ட வார்த்தைகளும் பேசுகிறவன்.*

*பெர்ரி பிறரை தூக்கிலிடும் பணியிலிருந்து ஓய்ந்த பிறகும், அவர் தூக்கிலிட்ட கைதிகளை பற்றிய சிந்தைகள் அவருடைய மனதை இரவும் பகலும் வாதித்தது. அவரது ஓய்வு நாட்கள் கொடிய துக்க நாட்களாய் மாறியது. தன்னை சித்திரவதை செய்த சிந்தைகளிலிருந்து அவர் விடுபட முடியாமல், தன்னை* **தற்கொலை செய்து** *மாய்ந்துக் கொள்ள முடிவு செய்தார். பிராட்போர்டு ஸ்டேஷனிலிருந்து கிளம்பும் ரயிலில் ஏறி, அதற்கு எதிர்புறமாய் வரும் ரயிலுக்கு முன்பாக விழுந்து தன்னை மாய்த்துக்கொள்ள தீர்மானித்துவிட்டார். தன்னை இம்சித்த வாழ்விலிருந்து விடுதலை பெறுவதற்கு அது ஒன்றே வழி என தீர்மானித்தார்!*

*ஸ்டேஷனில் தனியாய் நின்ற பெர்ரியிடம் ஒரு சகோதரன் நெருங்கி வந்தார். பெர்ரியைப் பார்த்து "ஸ்டேஷன் அருகிலுள்ள சுவிசேஷ மிஷனில் ஒரு கூட்டம் நடக்கப் போகிறது. அந்த கூட்டத்தில் இறைபக்தி கொண்ட ஊழியன்* **விக்கிள்ஸ்வொர்த்** *பேசுகிறார். நீங்கள்*

*வந்து பாருங்கள். உங்கள் வாழ்வில் நிச்சயமாய் மாற்றம் உண்டாகும்'' என அழைத்தார். அவர் கூறிய வார்த்தைகள் பெர்ரிக்கு மிகுந்த அதிர்ச்சியை தந்தது.*

**"தான் வாழ்வை முடிக்கச் செல்லும் இந்த தருணத்தில் 'உங்கள் வாழ்க்கை மாறும்' என்ற அழைப்பை பெர்ரியால் மறுக்க முடியவில்லை!**

*தன்னை மாய்த்துக் கொள்ளும் எண்ணத்தை ஒதுக்கி வைத்து விட்டு, அந்த மாலை கூட்டத்திற்கு உடனே பயணமானார். கூட்டத்தில் விக்கிள்ஸ்வொர்த் பேசிய பிரசங்கத்தை கேட்டு, தன் பாவத்தினிமித்தம் ஆழமாய் உணர்வடைந்த பெர்ரி 'ஓ' என மார்பில் அடித்து அழுது புலம்பினார். குளிரான அந்த கூட்ட அரங்கில் கண்ணீரும் வியர்வையும் பெர்ரியின் சட்டையை நனைத்தது, அந்த உஷ்ணம் பெர்ரியின் சட்டையிலிருந்து ஆவியாய் பறந்து சென்றது. அவரிடம் வந்த விக்கிள்ஸ்வொர்த், அவரது ஜெபத்தை தடைசெய்யாமல் விட்டுவிட்டார். சுமார் 2 1/2 மணிநேரம் ஜெபித்த பெர்ரி,* **தன் எஞ்சிய வாழ்க்கையை தேவனுக்கென்று முற்றிலுமாய் சரணடைந்தார்.** *அவரோடு பேசிய விக்கிள்ஸ்வொர்த், ஆண்டவரை நோக்கி ''இந்த ஆத்துமாவை குறித்து நான் என்ன செய்ய வேண்டும்?'' என கேட்டார். அதற்கு தேவன் ''இவனை அப்படியே விட்டுவிடாதே! அவனோடு சேர்ந்து நீயும் அவன் வீட்டிற்குச் செல்'' என கட்டளையிட்டார். மிகுந்த மகிழ்ச்சியுடன் விக்கிள்ஸ்வொர்த் பெர்ரியின் வீட்டு வாசலை அடைந்தவுடன், பெர்ரி தன் மனைவியைப் பார்த்து ''தேவன் என்னை இரட்சித்து மீட்டுக்கொண்டார்'' என அழுகையோடு கூற, அதற்கு அவரது மனைவியும் ஆனந்த கண்ணீருடன் ஆண்டவரை ஸ்தோத்தரித்தாள். அவளும் தன் ஜீவியத்தை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தாள்! விக்கிள்ஸ்வொர்த் பெர்ரியின் வீட்டிற்கு சென்றதினிமித்தம், பெர்ரியின் மனைவியும் இரட்சிப்பை கண்டடைந்தாள்.*

**"சில மணி நேரங்கள் தங்கியிருந்த விக்கிள்ஸ்வொர்த் அந்த வீடே கிறிஸ்துவின் பிரசன்னத்தால் கலகலப்பாய் மாறியதைக் கண்டார். அந்த வீட்டிலிருந்த பூனை கூட வீட்டில் ஏற்பட்ட மாற்றத்தை உணர்ந்து மகிழ்ச்சியோடு, துள்ளிக்குதித்ததை பார்த்து தேவனுக்கு நன்றி செலுத்தினார்!**

*பிற்காலங்களில் ''தூக்கிலிடும் கொடுமையை அகற்றுக!'' என்ற இயக்கத்திற்கு பெர்ரி தலைமை தாங்கி அந்த கொடிய சட்டத்தை மாற்றுவதற்கு ஒரு கருவியானார்!*

*- ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

## நம்பிக்கை தரும் 'விடிவெள்ளி நட்சத்திரம்!'

*இருளை போக்கும் நட்சத்திரம் நமக்கு உண்டு*

*கடந்த வருடத்தில் நாம் 'நம்பிக்கை இழந்த' நபர்கள் மீதும், நாம் நம்பிக்கை இழந்த நிகழ்வுகள் மீதும், மீண்டுமாய் நம்பிக்கையூட்டும் 'விடிவெள்ளி நட்சத்திரம்' நமது ஆண்டவர்! நம்பிக்கை இழந்த பகுதிகள் எத்தனை பாதிப்பாய் இருந்தாலும், அந்த இருள் விலகி 'வெளிச்சம் வரப்போகிறது' என அறிவிப்பதே அவரின் விடிவெள்ளி நட்சத்திரம்! இதுவே, இந்த ஆண்டில் அதிக உறுதியான தீர்க்கதரிசனமாய் 2பேதுரு 1:19-ம் வசனம் மகிழ்வுடன் நமக்கு வழங்கியுள்ளது! எதிர்காலத்தில், இனி நடைபெறப்போவதை உரைப்பதுதான் "தீர்க்கதரிசனம்!". ஆகவே, இந்த உறுதியான தீர்க்கதரிசனப்படி, இந்த ஆண்டில் என்ன நடந்தாலும்* **நம்பிக்கையின் விடிவெள்ளி** *நிச்சயமாய் நிறைவேறும் எனவும் "இருள் நீங்கி பிரகாசம் உண்டாகும்" எனவும் 2பேதுரு 1:19 கூறும் வசனத்தை கவனமாய் பற்றிக்கொண்டு, இந்த ஆண்டை கர்த்தருக்குள் ஜெயமாய் வாழ்வோமாக!*

> **" இத்தனை வலிமையான பரத்தின் நம்பிக்கையை கர்த்தரிடமிருந்து இலவசமாய் பெற்ற நாம் 'மற்றவர்களுக்கும்' எந்த நிபந்தனையுமின்றி 'இலவசமாய்' தாராளமாய் நம்பிக்கை வைப்பதையே கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்!**

*இந்த உலகில், உங்களைச் சுற்றியுள்ள வீட்டார், உறவினர்கள், அயலகத்தார், சபையிலுள்ள சகோதர சகோதரிகள் ஆகிய யாதொருவர் மீது கொண்டிருந்த 'இனி இவர்கள் மீது நம்பிக்கை இல்லை' என்ற நிலையை மாற்றி, எல்லோர் மீதும் நம்பிக்கை வைத்திடுவோமாக! மரித்து நாலு நாளாகிப்போன 'நம்பிக்கையற்ற' கல்லறைக்கும் இயேசு சென்றார்! 'அந்த லாசருவை' உயிர் பெறச் செய்தார்!*

*ஆகவே, இனிமுதல், நமக்கு 'நம்பிக்கை இல்லை' எனக்கூறிட ஒருவர்கூட இந்தப் பாருலகில் இருந்துவிடக்கூடாது! 'நம்பிக்கை' நமது ஆத்தும நங்கூரமாய் இருக்கிறபடியால், எந்த மறைவான 'திரையையும்' கடந்து செல்வதற்குரிய தைரியம் பெற்றிருக்கிறோம்! அதேபோல், யார்மீதும் நம்பிக்கை இழக்காமல் 'அவர் மாறுவார்' என்ற நல்ல எதிர்பார்ப்போடு மகிழ்வுடன் முன்செல்லக் கடவோம்! ஏனெனில்,* **நமக்கு 'முன்னோடியாய்'** *திரைகளை கடந்து சென்றவர் நம் ஆண்டவர் இயேசு என்பதே, அந்த நம்பிக்கைக்கு உறுதியாயிருக்கிறது! (எபி.6:19,20) அல்லேலூயா.*

*- T.ரத்தினகுமார்*

## வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை வாழ்ந்து பிரசங்கித்த தாசன்

# ஜோஹன் ஆஸ்கார் ஸ்மித்



நார்வேயின் கப்பற்படையில், கப்பலில் இருக்கும்போது 1898-ம் ஆண்டு தன் முழு வாலிபத்தையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார். தன் ஆரம்ப பள்ளியில் படித்து வந்த ஜோஹன் ஆஸ்கார் ஸ்மித், பள்ளி ஆசிரியர்கள் தங்கள் மாணாக்கரிடத்தில் 'ஏழை-பணக்காரர்' பாகுபாடு காண்பித்தபடியால் தன்னுடைய 15-ம் வயதில் கடல் தொழிலில் சேர்ந்தார். 2-கஷ்டமான வருடங்களுக்குப் பிறகு நார்வே கப்பற்படையில் தனது 15-ம் வயதில் சேர்ந்து சுமார் 40- வருடங்கள் பணியாற்றினார். 1898-ம் ஆண்டு மே- 19ம் தேதியில் மனம் திரும்பிய அவர் உடனடியாகவே தன் மகிழ்ச்சியை தன் பெற்றோர்களுக்கும் சகோதரர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்தார். ''கிறிஸ்து என் நண்பன், என் இரட்சகர்'' என கடிதத்தின் மூலம் தெரிவித்தார்.

அக்காலத்தில் சத்திய வேதத்தில் பிரதான வெளிப்பாடுகளைப் பெற்றார். இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் மூடுகிறபடியால் நாம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை என்ற போதனையை மறுத்தார். ரோமர் 1:5-கூறும் ''விசுவாசத்திற்கு கீழ்ப்படிதல் இல்லாமல்'' பரிசுத்தமாகுதல் இல்லை என்ற திவ்ய போதனையை பெற்றார். அதுபோலவே 1தீமோத்தேயு 3:16 கூறும் ''தேவபக்தியின் மகா இரகசியமான தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ஆவியில் பரிசுத்தராய் காணப்பட்டார் என்ற வசனத்தின் வெளிப்பாடு: மாம்சத்தில் வந்த இயேசு நம்மைப்போலவே சோதிக்கப்பட்டு பாவம் செய்யாது வாழ்ந்தபடியால் நாமும் இயேசுவைப்போன்று நடக்க முடியும்! இயேசு எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டு பாவம் செய்யாது வாழ்ந்தபடியால், நாமும் பாவத்தை முற்றிலும் ஜெயம் பெற முடியும் போன்ற சத்தியங்களை மிக ஆணித்தரமாய் வலியுறுத்தினார்.

மேலும் ''கிறிஸ்துவை குறித்தும் சபையைக் குறித்தும் வெளிப்பாடு கண்ட இவர். ஸ்தல சபையே கிறிஸ்துவின் சரீரமாகும்'' என்ற சத்தியத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். மேலும் ''தேவனுடைய முகத்திற்கு நேராய் ஜீவிக்கும் மக்களையே தேவன் விரும்புகிறார். அப்படியில்லாமல் மனுஷர் பார்வையில் ஜீவிக்கும் கிறிஸ்தவர்களே ஏராளம் இருக்கிறார்கள் என பிரசங்கித்து ஜனங்களை தேவனிடம், தலையாகிய கிறிஸ்துவிடம் இணைத்தார். கர்த்தருடைய ஆவியானவர் தன் மீது இருக்கிறபடியால் வேத வாக்கியங்களின் தெளிந்த சத்தியங்களை வெளிப்பாடாக பெற்று அதை அனுபவபூர்வமாய் வாழ்ந்து பிரசங்கித்தார். ஒருசமயம் ''இயேசுவை போன்ற வாழ்க்கையை வாழ விரும்பாதவர்கள் சபை வளாகத்திலிருந்து வெளியேறுங்கள் என கூறியவுடன் எல்லோரும் வெளியே சென்று விட்டார்கள். அச்சமயம் நீதிமொழிகள் 24:11 வசனத்தை கர்த்தர் நினைவுப்படுத்தி ''அனைவரும் அழிவைத் தேடும்போது ஒரு சிலரையாவது விடுவிக்கக்கூடுமானால் விடுவி'' என்ற வசனத்தை வாசித்ததும் ஆலய வாசலுக்கு வெளியே வந்தார். அங்கே எல்லிப்சன் என்ற சகோதரன் வாசலில் அழுதுகொண்டிருந்தார். அவரோடும் தன் இளைய சகோதரன் அக்ஸல் ஸ்மித்தோடும் ''தூய சாட்சியான'' சபையை கர்த்தர் எழுப்பும்படி செய்தார். அன்று ஆரம்பித்த 'மறைவான பொக்கிஷங்கள்' பத்திரிக்கை சுமார் 100 வருடங்களாய் அனேகரை ஆசீர்வதித்து வருகிறது. கிறிஸ்துவோடு கொண்ட தனிப்பட்ட உறவே மேலானது என்று பலமுறை பிரசங்கித்த J.O.ஸ்மித் 1943-ம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவரோடு இணைந்து பணியாற்றிய எலியாஸ் அஸ்லாக்சன் ''இவரைப்போன்ற ஒரு தேவ மனிதரை நான் கண்டதில்லை. இந்த முழு தேசத்திலும் கர்த்தருக்காய் வாழ்ந்த தாழ்மையுள்ள ஊழியன் இவரை தவிர நான் யாரையும் காணவில்லை'' என அவரது அடக்க ஆராதனையில் கண்ணீரோடு கூறினார்!.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## இந்த பூமியிலேயே துவங்கும் மோட்சானந்த பாக்கியம்!

இந்த உலகத்தில் ஆண்டவருடைய பாதங்களண்டையில் உட்கார்ந்து அவருடைய இன்ப சத்தம் கேட்டு மனமகிழவும், அவரைப் பாடித் துதித்து ஆனந்திக்கவும் மனமற்று, 24 மணி நேரமும் தொலைக்காட்சியில் ஓடிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ நிகழ்ச்சி களையும், இதர டி.வி, நிகழ்ச்சிகளையும் நாடி, அவைகளையே சதா மனதில் வைத்துக்கொண்டிருக்கும் மாந்தர்களுக்கு பரலோகத்தில் கர்த்தாவின் பாதங்கள் ஆனந்தக் களிகூருதலாக இருக்கும் என எண்ணுவது வேடிக்கை கூத்தாகும்!

இந்த பூவுலகத்தில் ஆண்டவரின் பாதங்களண்டை உட்கார மனமற்றிருக்கும் இவர்களுக்கு பரலோகத்தில் அவருடைய பாதங்களண்டை உட்கார ஆசையும் ஆவலும் திடீரென எங்கிருந்து வரும் என்று நான் உங்களைப் பார்த்துக் கேட்கின்றேன். அன்பான வாலிபர்களே, வஞ்சிக்கப்பட்டுப்போகாதிருங்கள். ஏற்ற சமயமான இப்போதாவது விழிப்படைந்து விடுங்கள்!

மரித்த பின்பு எங்கு செல்வேன்? மோட்சமா அல்லது நரகமா என்ற சந்தேகத்துக்கேதுவான கேள்வி அல்ல, மெய்யான தேவ மக்களுக்கு இங்கேயே அவர்கள் இருதயத்தில் மோட்சம் ஆரம்பித்து அவர்கள் மரித்த பின்னர், அந்த மோட்ச வாழ்வு பரலோகத்திற்கும் தொடரு கின்றது! இந்த மோட்ச வாழ்வை வாலிபனே நீங்கள் இதுவரை உன் உள்ளத்தில் பெற்றுக்கொள்ளாதிருந்தால் இன்றே உன் இரட்சகர் இயேசுவிடம் வந்து உன் பாவங்களை மனந்திரும்பிய இருதயத்தின் பெருமூச்சோடும், கண்ணீரோடும் தேவ சமூகத்தில் அறிக்கை செய்து பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும், உலகம் தரக்கூடாத தேவ சமாதானத் தையும், மோட்சானந்த பாக்கியத்தையும் உன் இருதயத்தில் பெற்றுக் கொள்வாயாக! அதற்கான தேவ கிருபைகளை ஆண்டவர் இயேசு தாமே உங்களுக்கும் அனேக வாலிபர்களுக்கும் தந்தருள்வாராக. ஆமென்.

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**